J/CHAVAKACHCHERI HINDU COLLEGE OLD STUDENT UNION NORWAY

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழையமாணவர் ஒன்றியம் - நோர்வே

# 10வது ஆண்டு நிறைவு மலர்

2004 - 2014





Org.nr: 988 131 822

BANK A/C:- 1503 35 89260

Web: http://hinducollechava.com

e-mail: chc.oldstudentnorway@gmail.com

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழையமாணவவர் ஒன்றியம்
நோர்வே

# 10 வது ஆண்டு நிறைவு மலர்

# கல்லூரிக் கீதம்

இராகம்:— தர்பார் தாளம்:— ரூபகம்

## பல்லவி

வாழ்க இந்துக்கல்லூரி வாழ்கவே— வாழ்கவே
வாழ்க இந்துக்கல்லூரி வாழ்கவே — வாழ்கவே

## அனுபல்லவி

வாழ்க நம்திரு வாழ்க நம்கலை
நாளும் நன்மையும் உண்மையும் ஓங்கவே — வாழ்க

## சரணம்

அறமும் அன்பும் அருளும் தழைக்க
ஆன்ம நேய உணர்வு செழிக்க
உறவு கனிந்தே உயர்வு நிலைக்க
உலகில் புகழும் அறிவும் தரிக்க — வாழ்க

ஆக்கியோன்
அமரர் இசையரசு S.S இரத்தினம்

முன்னாள் சங்கீத ஆசிரியர்
சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## எம்மைபற்றி.

"யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழையமாணவர் ஒன்றியம் நோர்வே" 1999ம் ஆண்டு ஒஸ்லோவில் இங்குள்ள பழையமாணவர்களால் கல்லூரிநினைவலைகளை பகிர்ந்துகொள்ளல் என்றவகையில் ஆரம்பிக்கப்பட்டது. அந்தக்காலப்பகுதியில் ஒன்றியத்தின் செயற்பாடுகள் கல்லூரியை நோக்கி ஓரளவு நகர்ந்திருந்தாலும் இலங்கையில் இடம்பெற்ற போரினால் ஒருதேக்க நிலையிலேயே இருந்தது.

அதன் பிற்பாடு மீண்டும் 21.09.2004 முதல் கல்லூரியின் வளர்ச்சியில் நோர்வே பழையமாணவர்களின் பங்களிப்பும் தேவை என்ற கருத்தின் அடிப்படையில் ஆர்வமுள்ளவர்களாலும், இளைப்பாறிய ஆசிரியை திருமதி. சரஸ்வதி பொன்னம்பலம் அவர்களுடைய ஆலோசனையிலும் புதிய நிர்வாகத்தின் செயற்பாடுகள் ஆரம்பித்து, தனது செயற்பாடுகளை முன்னேடுத்து வருகின்றது.

### எமதுநோக்கம்.

அறிவாற்றல் உள்ள தமிழ் மாணவ சமுதாயத்தை உருவாக்குவது.

### எமதுபணி.

- நோர்வேயில் வசிக்கும் அனைத்து பழைய மாணவர்களையும் ஒன்றுதிரட்டல். அதன் மூலம் தமது பாடசாலை நினைவலைகளை பகிர்ந்துகொள்ள களமமைத்துக் கொடுத்தல்.
- சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்கு எம்மால் முடிந்தளவு பங்களிப்பு செய்தல்.
- சாவகச்சேரியை சூழவுள்ள ஏனைய பாடசாலைகட்கு கல்விசார்ந்த,மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளை அறிந்து, எம்மால் முடிந்த, வருடத்திற்கு ஒருதடவை ஒருபாடசாலை என்ற ரீதியில் உதவுதல்.

எம்மை பற்றி மேலும் அறிந்துகொள்ள எமது webside (hjemmeside) வை பார்வையிடவும்.

எம்முடன் தொடர்பு கொள்ள:- chc.oldstudentnorway@gmail.com.
உங்களிடமிருந்து வரும் பதிலும், ஆலோசனைகளும் தான் எம்மை ஊக்கப்படுத்தும்.

### நிர்வாகம்.

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஒன்றியம் நோர்வே.

**J/CHAVAKACHCHERI HINDU COLLEGE OLD STUDENT UNION NORWAY.**

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஒன்றியம் - நோர்வே.

நோர்வே–யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரிபழையமாணவர் ஒன்றியத்தால் செயல்படுத்திபூரணப்படுத்தப்பட்டசெயற்திட்டங்கள்.

**2004**

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு சுவர்ணி நகைமாடம் ஆதரவில் ஒன்றியத்தினூடாக நிழற்பட இயந்திரம் (Kopimaskin) அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இலங்கை ரூபா 188 875.00

**2005**

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் முழுவதற்குமான மின்இணைப்பு செய்தமை.

இலங்கை ரூபா: 70 000.00

**2006**

நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் - நூலககட்டிடம், நூலக உபகரணங்கள், நூல்கள்

இலங்கை ரூபா: 130 000.00

**2007**

நாட்டு நிலமைகாரணமாக எந்ததிட்டமும் செயற்படுத்த முடியவில்லை மனம் வருந்துகின்றோம்.

**2008**

சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆரம்பபாடசாலை நிழற்பட இயந்திரம் (kopimaskin), printer, மின்பொருள், மின்இணைப்பு வேலை.

இலங்கை ரூபா: 241 500.00

**2009**

மீசாலை கமலாம்பிகை வித்தியாலய பின்புறமதில் கட்டியமை.

இலங்கை ரூபா: 251 875.00

**2010**

1) மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம் நிழற்பட இயந்திரம் (kopimaskin) அத்துடன் போரினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த 50 மாணவர்களுக்கான சப்பாத்துகள் (50 par sko)

இலங்கை ரூபா: 185 000.00

2) இந்துக்கல்லூரிக்கு சிற்றுண்டிச்சாலைகட்ட (கிட்டத்தட்ட 10 லட்சம்) ஆரம்பநிதியாக வங்கியில் வைப்பு செய்யப்பட்டது.

இலங்கை ரூபா 75 000.00

**2011**

1) இந்துக்கல்லூரிக்கு சிற்றுண்டிச்சாலைகட்ட மிகுதி நிதியாக வங்கியில் வைப்பு செய்யப்பட்டது.
இலங்கை ரூபா: 750 000.00

மொத்தமாக வைப்பு செய்யப்பட்ட தொகை இலங்கை ரூபா: 825 000.00

சிற்றுண்டிச்சாலையை பலகாரணங்களால் எம்மால் பூர்த்தி செய்ய முடியவில்லை.

2) கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலத்துக்கு டுப்ளோ போட்டோ பிரதி இயந்திரம் வாங்கி கொடுக்கப்பட்டது. இத்திட்டதால் சுற்றியுள்ள 7 பாடசாலைகளும் பயனடைகின்றது.

அப்பாடசாலைகள்

- யா/ உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்.
- யா/ விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்.
- யா/ கெற்பேலி அ.த.க. பாடசாலை.
- யா/ போக்கட்டி றோ.க.த.க. பாடசாலை.
- யா/ போக்கட்டி அ.த.க. பாடசாலை.
- யா/ மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை.
- யா/ கச்சாய் அ.த.க. பாடசாலை.

மிகுதிப்பணத்தில் மதில் கட்டப்பட்டது.
இலங்கை ரூபா: 500 000.00

**2012**

எம்முடன் எவரும் உதவி கேட்டுத் தொடர்பு கொள்ளாத கரணத்தால் எம்மால் எந்ததிட்டமும் செயற்படுத்த முடியவில்லை எனமனம் வருந்துகின்றோம்.

**2013**

- யா/கச்சாய் அ. த. க. பாடசாலை கொடிகாமத்துக்கு ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான விளையாட்டு மைதானம் மற்றும் பூங்கா அமைத்தல்.
இலங்கை ரூபா: 300 000.00

- யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி 01.11.2013 முதல் விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கு உதவியாளர்கள் இரு மாணவர்கள் நியமனம் செய்தனர். கல்லூரியில் உயர்தரபரீட்சை எழுதி பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் இம் மாணவர்களுக்கு அவர்களுடைய எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு மாதாந்தம் தலா ஜந்தாயிரம் ரூபா ஊதியமாக வழங்கபடுகின்றது. இத்திட்டத்திற்கு 2011ல் சிற்றுண்டிச்சாலைக்கு வைப்பு செய்யப்பட்ட பணத்திலிருந்து ஊதியம் வழங்கப்பட்டு வருகின்றது.
இலங்கை ரூபா: 120 000.00 வருடம்.

- இலங்கையில் நீடித்தயுத்ததின் காரணமாக தாய் தந்தையரை இழந்த மாணவர்களுக்கும், வறுமைக்கோட்டினுள் தவிக்கின்ற, கல்வியில் ஆர்வமுடைய மாணவர்களுக்கும், எமது ஒன்றியம் தென்மராட்சியில் உள்ள சில பாடசாலைகளின் அதிபர்களின்/ நிர்வாகத்தினரின் உதவியுடன் மாணவர்களை தெரிவு செய்து, இலங்கைக்கு வெளியில் வசிக்கும் உதவி மனப்பான்மையுள்ள குடும்பத்தினர்களிடம்/ நபர்களிடம், இந்த மாணவர்களின் கல்விக்கான பண உதவிகளை வழங்குவதற்கான எற்பாடுகளைச் செய்து கொடுக்கின்றோம்.

  இத்திட்டத்திற்கு எமது ஒன்றியம் இம்மாணவர்களுக்கும் உதவி செய்யும் குடும்பத்தினருக்கும்/ நபர்களுக்கும் இடையில் ஒரு ஆரம்பகட்ட தொடர்பாளராக மட்டுமே செயல்படுகின்றது.

2013ம் ஆண்டு முதல் நோர்வேயிலும், கனடாவிலும் வசிக்கும் இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த 4 குடும்பத்தினர் 8 மாணவர்களின் கல்விக்கு பண உதவி செய்து வருகின்றனர்.

இவர்கள் தங்களின் வசதிகளுக்கு ஏற்பவும், மாணவர்களின் தேவைகளுக்கு ஏற்பவும் உதவிகளைச் செய்து வருவதுடன், அவர்களிற் கிடையிலான தொடர்புகளையும் தாங்களே பேணி வருகின்றனர்.

இத்திட்டத்தில் நீங்களும் இணைந்து உதவிசெய்ய விரும்பின் எம்முடன் தொடர்பு கொள்ளவும். உங்களின் வசதிகளுக்கு ஏற்ப உதவிகளை செய்ய ஒழுங்குகள் செய்துதரப்படும்.

## 2014

2014ம் ஆண்டுதிட்டத்தின் கீழ் இரண்டு பாடசாலைகள் உதவிபெற்றன.


பங்களிப்பு 1.

யா/மந்துவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்திற்கு TOSHIBA E-tudio 2007 நிழற்பட இயந்திரம் அன்பளிப்பு செய்யப்பட்டது.
இலங்கை ரூபா: 155 680.00

பங்களிப்பு 2.

யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்திற்கு TOSHIBA E-Studio 2007 நிழற்பட இயந்திரம் அன்பளிப்புச் செய்யப்பட்டது.
இலங்கை ரூபா:155 680.00

இரு பாடசாலைகளுக்கும் ஒன்றியத்தின் தலைவர், கல்வி அதிகாரிகளுடன் நேரடியாக சென்று இவ் அன்பளிப்பை வழங்கியதுடன் மாணவர்களின், பாடசாலைகளின் நிலமைகளையும் நேரில் தெரிந்துகொண்டனர்.


சிறுவர் விளையாட்டு முற்றம்
அன்பளிப்பு
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
பழைய மாணவர் ஒன்றியம்-நோர்வே-


சிறுவர் விளையாட்டு முற்றம்








# JMP



## Jewellers And Textiles

நவீன ரக தங்கநகைகளுக்கும் , சாறிகள் , பஞ்சாபி வகைகளுக்கு நடவேண்டிய ஒரே இடம் **JMP** Jewellers And Textiles

முகவரி : Veitvet Senter, Veitvet Veien 8, 059 6 Oslo

# FULLFØRTE PROSJEKTER.

**2004**

Chavakachcheri Hindu College fikk en kopimaskin i gave fra foreningen vår, som ble sponset av Swarny Gullsmed, på en verdi av SL – Rs. 188 875.00

**2005**

Veerasingam Mahavidyalayam Meesalai fikk installert elektrisitet til hele skolen. SL – Rs. 70 000.00



## தென்மராட்சி மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு நிதி

தென்மராட்சி,மே24

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நோர்வே கிளையினர் வலயத்தில் உள்ள ஏனைய பாடசாலை மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்திற்கொண்டு செயற்றிட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர். வருடாவருடம் ஒரு பாடசாலையைத் தெரிவுசெய்து அதனை மேம்படுத்துவதற்கு செயற்றிட்டங்களை வகுத்துள்ளனர்.

இவ்வருடம் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் கற்றல், கற்பித்தல் தன்மையை மேம்படுத்த சகல வகுப்பறைகளுக்கும் மின் னிணைப்பு வழங்க நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் கு.சிவானந்தம் தெரிவித்தார்.

வருடாவருடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு வழங்கும் நிதிக்கு மேலதிகமாக ஏனைய பாடசாலைகளின் கல்வி வளர்ச்சிக்கு நிதி வழங்க முன்வந்துள்ளதாகவும் - தெரிவித்தார். (எ-117)

**2006**

Nunavil East Amirthambikai Vidyalayam fikk bygd skolebibliotek, utstyr til bibliotek og bøker til biblioteket. Verdi SL – Rs. 130 000.00

**2007**

Grunnet situasjonen på Sri Lanka, kunne vi ikke utføre noe arbeid der. Dette er veldig beklagelig.

**2008**

Chavakachcheri Hindu College barneskole fikk kopimaskin, printer, elektrisk utstyr, og innlagt elektrisitet som gave til en verdi av SL – Rs. 241 500.00

**2009**

Meesalai Kamalambikai Vidyalayam fikk bygd murvegg langs baksiden av skolegården.
Verdi SL – Rs. 251 875.00

**2010**

1) Meesalai Vigneswara Maha Vidyalayam har mottatt kopimaskin og sko til 50 barn som har vært rammet av krigen (50 par sko). Verdi SLRs 185 000.00

2) Chavakachcheri Hindu College fikk penge gave som ble satt inn på en sparekonto for å spare til å bygge skolekantine. Prosjektet kommer til å koste ca. SLRs 1 000 000.00 Startbeløp ble satt inn av oss på SL – Rs. 75 000.00

**2011**

1) Chavakachcheri Hindu College har mottatt mer inn på sparekonto for bygging av skolekantine. Summen var i SL – Rs. 750 000.00 Totalsum på bankkonto er nå SL – Rs. 825 000.00

   Skole kantine prosjektet ble dessverre ikke noe av, grunnet flere årsaker.

2) Kodikamam Thirunavukkarasu Maha Vidyalayam fikk en kopimaskin i gave. 7 andre skoler får også nytte av denne kopimaskinen. Det ble bygd murvegg av pengene som ble til overs.
   Verdi SL – Rs. 500 000.00

   Under følger en liste av de overnevnte 7 skolene som også bruker denne kopimaskinen:

- J/ Usan Ramanathan Maha Vidyalayam .
- J/ Vidatalpalai Kamalasany Vidyalayam.
- J/ Ketpely G.T.M.School .
- J/ Pokkaddy R.C.T.M. School.
- J/ Pokkaddy G.T.M. School.
- J/ Mirusuvil R.C.T.M. School.
- J/ Kachchai G.T.M. School.

**2012**

Ingen har kontaktet oss for å be om støtte, dermed hadde vi dessverre ingen prosjekt som ble gjort i år. Dette er beklagelig.

**2013**

1) J/ Kachchai G.T.M. School i Kodikamam: Det ble laget ny idrettsbane og park for barn.
   Verdi SL – Rs. 300 000.00

2) J/ Chavakachcheri Hindu College får støtte til å lønne to assistenter til laboratorium. De som ble ansatt var to studenter som akkurat har uteksaminert fra denne skolen. Hensikten med dette var å bruke egne ressurser i skolen, samtidig som deres fremtid også ble tatt vare på. Dette prosjektet kostet SL – Rs. 5000.00 per måned per person. Vi bruker fortsatt de pengene som ble investert i sparekonto for skolekantinen i 2011. Det er en verdi på SL – Rs. 120 000.00 per år.

3) På Sri Lanka har krigen gjort mange barn foreldreløse og mange barn som har lyst til å studere lever under fattigdoms grensen. Disse barna blir plukket ut ved hjelp av skolerektorer og skoleadministrasjoner. Disse barna blir tatt hånd om av familier som bor i andre land som er velvillige til å hjelpe dem til å få seg utdanning. I dette prosjektet vil vår forening kun opprette første kontakt mellom disse familiene og barna.

   Siden 2013 hjelper 4 familier bosatt i Norge og Canada, der familien i Canada er indisk tamilske. Disse fire familiene hjelper tilsammen 8 elever med å dekke kostnadene til utdanningen på Sri Lanka. De hjelper disse studentene etter behov og den økonomiske støtten avhenger også av hva slags evne de har til å hjelpe. De styrer og opprettholder kontakten selv med elevene.

   Hvis noen av dere ønsker å delta i dette prosjektet for å hjelpe studenter, ta kontakt med oss. Vi kan finne løsninger som er tilpasset deres evne og økonomi.

**2014**

I 2014 fikk de to skoler støtte:

- J/ Manthuvil R.C.T.Maha Vidyalayam fikk en kopimaskin TOSHIBA E-Studio 2007 i gave.
  Verdi SL – Rs. 155 680.00

- J/ Manthuvil Sri Bharathy Viddiyalayam fikk en kopimaskin TOSHIBA E-Studio 2007 i gave. Verdi SL – Rs. 155 680.00

Disse kopimaskinene ble gitt personlig av lederen av J/Chavakachcheri Hindu College Old Student Union og lederen for den lokale utdanningsetaten i Jaffna.

# அகவை பத்து



கல்வி தமிழர்களின் வாழ்வாதாரம். கல்விதான் வாழ்க்கையின் திறவுகோல். இது முன்னோர்கள் கூறிய வார்த்தை. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் கல்வியை பூரணப்படுத்த முடியாத மாணவர்கள், மற்றும் கற்பிப்பதற்கான போதிய வளங்கள் குன்றிய பாடசாலைகட்கு உதவுதல் மூலம், மாணவர்களின் வளர்ச்சிக்கு உதவும் , என்ற நம்பிக்கையில் இயங்கிக் கொண்டிருப்பது தான் சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர்சங்க நோர்வே கிளை. எம்மால் பூரணப்படுத்தப்பட்ட திட்டங்கள் மூலம் கல்லூரிகள் பயனடைகிறார்கள் என்பதை நேரடியாகவே கண்டுள்ளோம்.

இவ் ஆண்டுமலர்மூலம் இதுவரை நடைபெற்ற அனைத்து விடையங்களையும் தொகுத்து, பதிவாக்கி உறுப்பினர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் கிடைக்க வழிவகுத்துள்ளோம்.

நோர்வே பழையமாணவர் ஒன்றியத்தின் வரலாறு மற்றும் நோக்கம், பங்களிப்புக்கள் பற்றி இம்மலரிலும் இணையத்தளத்திலும் விபரமாக உள்ளது. எனினும் பதிவில் இல்லாத ஆனால் பதியப்படவேண்டிய சில முக்கியமான விடயங்களை மட்டும் பதிவாக்க கடமைப்பட்டுள்ளேன்.

புலம்பெயர் தேசங்களில் இயங்கிகவரும் பழையமாணவர் சங்கங்கள் பெரும்பாலும் பங்களிப்புக்களை தமது கல்லூரி சார்ந்தே அளித்து வருகின்றனர். நோர்வே பழையமாணவர் ஒன்றியம் மட்டும்தான் தனது கல்லூரிக்கு உதவும் அதே நேரம் சூழவுள்ள பாடசாலைகட்கும் தொடர்ச்சியான பங்களிப்பை செய்து வருகின்றது என்பதை இத்தருணத்திலே தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். பத்து வருடங்களிலே இந்துக்கல்லூரி மற்றும் சூழுவுள்ள பாடசாலைகட்கு வருடத்திற்கு ஒருதடவை என்ற ரீதியிலே உதவிசெய்தல், என்ற எமது கோட்பாடுகட்கு அமைவாக பங்களிப்புக்களை மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே பூர்த்திசெய்து வந்துள்ளது. நோர்வே பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகளின் இந்த பங்களிப்பானது தென்மராட்சி பாடசாலைகள் , மற்றும் கல்விச்சமூகம் , கல்வி அதிகாரிகளினால் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது என்பதை மிகவும் பெருமையுடன் கூறிக்கொள்வதில் திருப்தியடைகின்றோம். இதற்காக உழைத்துக்கொண்டிருக்கும் அனைவரும் பாராட்டுக்குரியவர்களே.

தாயகத்திலே புறச்சூழல் ஆரம்பத்திலே பலதடவை ஒன்றியத்திற்கு ஏதுவாக இல்லாதபோதும் , மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே பங்களிப்புக்களை செய்துமுடித்துள்ளது. பாடசாலை சமூகங்களும் திருப்தியடைந்துள்ளனர் . பலனடைந்து வருகின்னர். எனினும் 2007ம் ஆண்டு நாட்டுநிலமை காரணமாக பலதடவை பலவழிகளில் முயற்சித்தும் எந்த திட்டங்களையும் எம்மால் செயல்படுத்தமுடியவில்லை .

நோர்வே பழையமாணவர் ஒன்றியத்தின் பங்களிப்புகளை ஒழுங்காக பூர்த்திசெய்து செலவீனங்களுக்கான அறிக்கையையும் ஒழுங்காக எமக்கு தந்து ஒன்றியத்திற்கு பூரணஒத்துளைப்பு தந்த அனைத்து கல்லூரி அதிபர்கள் , ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் திரு.நந்தகுமார் மற்றும் பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

வேண்டுகோள்

நிர்வாகத்தினர் ஒரு தொடர்பாளர்களாக மட்டுமே செயற்பட்டு வருகின்றனர். பூர்த்திசெய்யப்படும் அனைத்து திட்டங்களும் நோர்வே வாழ் அனைத்து பழையமாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரினதும் பங்களிப்பாகவே பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. எனவே இங்குள்ள பழையமாணவர்கள் தாமாகவே முன்வந்து தமது ஆளுமைக்கு ஏற்ப ஒன்றியத்துடன் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

தற்போது வருடத்திற்கு ஒரு பாடசாலை என்ற ரீதியிலேயே பாடசாலைகளின் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றது. ஆனால் நாட்டிலிருந்து பல பாடசாலைகள் தமது தேவைகளை நிறைவேற்றித்தருமாறு தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். ஒன்றிற்கு மேற்பட்ட பாடசாலைகள் மற்றும் கல்விசார்ந்த மாணவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதே ஒன்றியத்தின் எதிர்கால திட்டம்.

நன்றி

கடந்தவருட பங்களிப்பின்போது அரசாங்கஅனுமதி மற்றும் ஏனைய ஆலோசனைகள் வழங்கி செயற்திட்டங்கள் பூர்த்தியாவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிய வலயக்கல்வி அதிகாரி திரு.கிருஸ்ணகுமார் அவர்கட்கும் கோட்டக்கல்வி அதிகாரி திரு. சிவானந்தம் அவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றிகள். தொடர்ந்து ஒன்றியத்தின் பங்களிப்புக்களுக்கு தம்மாலான ஒத்துழைப்பு தருவதாகவும் கூறி எம்மை மேலும் உற்சாகப்படுத்தியுள்ளார்கள்.

புலம்பெயர் நாடுகளிலே மிகக்குறைந்த இந்துக்கல்லூரி பழையமாணவர்கள் உள்ள நாடுகளிலே நோர்வேயையும் உள்ளடக்கலாம். அதிலும் ஒன்றியத்தின் செயற்பாடுகளில் தொடர்ந்து தங்களை ஈடுபடுத்திக்கொண்டவர்கள் மிகமிக குறைவு. இணைந்து செயற்பட்ட அனைவருக்கும் ஒன்றியத்தின் சார்பில் நன்றிகள். இவர்களைவிட இங்கு பிறந்து வளர்ந்துவரும் சிறார்கள் தென்மராட்சியைச்சேர்ந்த ஆனால் இந்துக்கல்லூரியில் கல்விகற்காத நலன்விரும்பிகள் மற்றும் தென்மராட்சியை சேராதவர்களின் பங்களிப்பு அதிகம். ஒன்றியத்தின் செயற்பாடுகளை கேள்விப்பட்டு தாமகவே முன்வந்து இவர்கள் ஒன்றியத்துடன் தம்மை ஈடுபடுத்தி பங்களிப்பை தொடர்ந்து வழங்கி வருகின்றார்கள். இவர்களின் பங்களிப்பை ஒன்றியம் நன்றியுடன் நினைவுகூர்கின்றது.

இனிவரும் காலங்களில் ஒன்றியத்தின் வளர்ச்சியை கருத்தில்கொண்டு மேற்குறிப்பட்ட நலன்விரும்பிகளையும் இணைத்து செயற்படக்கூடியதாக திட்டமிடல் ஒன்றியத்திற்கு மிகுந்த ஆரோக்கியமானதாக இருப்பதுடன் ஒன்றிற்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு பங்களிப்பாற்றுவதற்கும் இலகுவானதாக அமையும்.

இவர்களுடன் நோர்வேயில் வதிவிட மற்றும் தொழில்புரிவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு தாயகத்திற்கு திருப்பி அனுப்பப்படுவோம் என்று தெரிந்தும் ஒன்றியத்தின் செயற்பாடுகளிலே தம்மை ஈடுபடுத்தி பங்காற்றி தற்போது திருப்பி அனுப்பப்பட்ட உறவுகளை என்றென்றும் நன்றியுடன் நினைவில் இருத்தியுள்ளது.

அதேபோல நடைபெற்ற அனைத்து கலைவிழாக்களின்போதும் தாமாகவே எம்முடன் தொடர்புகொண்டு பூரண ஒத்துளைப்பு வழங்கியோர், நிகழ்ச்சிகைளை திறம்பட நடாத்திய கலைஞர்கள், இவர்கள் ஆசிரியர்கள், ஒலி ஒளி, நிழற்படம் போன்றவற்றினுடாகவும் அனுசரணை வழங்கியோர்கள் மற்றும் ஏனைய வழிகளில் உதவிபுரிந்த அனைவருக்கும் நன்றிகள் பல.

ஒன்றியத்தின் முக்கியகுறிக்கோளான உதவுதல் என்ற நிலையிலேயே நிர்வாக உறுப்பினர்கள் தங்களை அர்ப்பணித்து வருகின்றனர். அதற்காக நோர்வேயில் ஏற்படும் செலவீனங்களில் ஒருபகுதியை நிர்வாகத்தினர் தமது சொந்த நிதிமூலமே அன்று தொடக்கம் இன்றுவரை பூர்த்தி செய்து வருகின்றனர். அதுமட்டுமல்லாமல் எத்தகைய இடைஞ்சல்கள் வந்தபோதும் நிர்வாகத்தினர் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையுடன் இலக்கை அடைந்துள்ளோம்.

கடந்த பத்து வருடங்களாக ஒன்றியத்தின் நிதி வருவாய்களிற்கு காரணமாக இருந்துவரும் திரு. சிறீ இளங்கோ நாகராசா அவர்கட்கும் ஒன்றியத்தின் வளர்ச்சிக்காக பாடுபடும் அங்கத்தவர்கள், உறுதுணையாகவிருக்கும் அவர்கள் குடும்பத்தினர்கள், மற்றும் இணையத்தளத்தை உருவாக்குவதிலும் தொடர்ந்து இயக்குவதற்கும் மிகுந்த சுமைகளுக்கு மத்தியிலும் ஒத்துளைப்பு நல்கிவரும் பழையமாணவர் அல்லாத திரு. ஜெகநாதன் சிதம்பரநாதன் அவர்கட்கும், ஆரம்ப காலம் தொட்டு கணணிவேலைப்பாடு சிற்றுண்டிகள் தயாரித்தல், மற்றும் ஏனைய சகல வழிகளிலேயும் பங்குபெறும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

ஒன்றியத்தினூடான உதவி

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து கல்விக்கோட்டை எட்டவேண்டுமென நினைக்கும் மாணவர்கட்கு கல்விக்கான பண உதவிகளை நோர்வே மற்றும் கனடா வாழ் நான்கு குடும்பத்தினர் எட்டு மாணவர்களுக்கு உதவிவருகின்றனர். இவர்களுக்கான ஆரம்ப தொடர்பாளர்களாக ஒன்றியம் இருந்து வருகின்றது.

இத் திட்டத்தில் இணைய விரும்புகின்றவர்கள் ஒன்றியத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யோகாசனம்

திரு. தம்பா அவர்களின் மேற்பார்வையில் ஒன்றியத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டு EngeL Paradis இல் இடம்பெற்றுவந்த யோகாசனவகுப்புக்கள் தற்காலிகமாக நடைபெறவில்லை. ஆர்வமுள்ளவர்கள் சேரும்பட்சத்தில் வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பமாகும். திரு.தம்பா மற்றும் திரு. சுதன் அவர்கட்கும் நன்றி.

நிறைவாக சிறு துளி பெரு வெள்ளம் எனக்கூறி தாயகத்திலுள்ள எமது மாணவச்செல்வங்களின் கல்வி மேம்பாட்டிற்கு கை கொடுக்க கை கோர்ப்போமாக.

நன்றி
மு.சிவபாலன்
தலைவர்



சாவகச்சேரி பழையமாணவர்
ஆசிரியர் சங்கம்
பிரித்தானியா
08.10.2014

யாழ் சாவகச்சேரி இந்துக்கல்லூர்ரி
பழையமாணவர் சங்கம் நோர்வே

அன்புடையீர்

நோர்வே பழையமாணவர்கள் நலன்விரும்பிகள் சேர்ந்து இந்துஅன்னையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபடுவதை யான் நன்கு அறிவேன். 2004ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இச்சங்கம் தவழ்ந்து நடந்து ஒருபிள்ளையாக உருவெடுத்து பத்தாவது அகவை அடைவதையிட்டு மகிழ்ச்சியும் உவகையும் அடைகின்றேன்.

இத்தருணத்தில் என்னையும் என்மகனையும் வந்து சிறப்பிக்குமாறு அழைத்தீர்கள். ஏனோ என்மகன் விஜயனின் இழப்பு எல்லோருக்கும் பேரதிர்ச்சியை தந்துள்ளது. அவர் எடுத்த முயற்சி குன்றாது பாடசாலை அபிவிருத்திக்கு ஒத்தாசை செய்யுமாறு மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். என்மகனின் ஆதங்கமும் இதுவேதான்.

மக்கள்பணி மகேசன் பணி என்பார்கள். அவரின் ஆசி என்றென்றும் கிடைக்குமெனக்கூறி 10ம் ஆண்டுமலர் விழா மிகவும் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க இந்துக்கல்லூரி

இங்கனம்
திருமதி.ச.பொன்னம்பலம்
பிரித்தானியா பழையமாணவர் ஆசிரியர் சங்கம்



## அகவை பத்தில் தடம் பதிக்கும்
## ஒன்றியம் ஓங்கி வளர்கவே!

தென்மராட்சிப் பிரதேசத்தின் கல்வி, சமூக அபிவிருத்தியின் விழுதாய் நோர்வே நாட்டில் உருவெடுத்து தாயக மண்ணில் கல்வி அபிவிருத்தியிலும் சமூக அபிவிருத்தியிலும் பங்காற்றி பத்து அகவையை நிறைவுசெய்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் ஒன்றியத்தின் நோர்வே கிளையினரால் வெளியீடு செய்யும் மலருக்கு வாழ்த்துரைப்பதில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் நிறைவடைகின்றேன்.

2004-ம் ஆண்டு ஒரு சில சமூக ஆர்வலர்களுடைய முயற்சியினால் கருக்கொண்டு குறைந்தளவிலான பழைய மாணவர் அங்கத்தவர்களுடனும் நோர்வே நாட்டின் கொடையாளர் களதும் மனம் நிறைந்த பங்களிப்புடன் இன்று வரை எமது பிரதேசத்தின் பல பாடசாலைகளின் கற்றல் மற்றும் பௌதிக அபிவிருத்திக்காக மேற்படி ஒன்றியம் செயற்பட்டு வருகின்றது என்பது பாராட்டுதற்குரியது.

"கல்விக்காக வழங்கப்படும் உதவி காலத்தால் அழியாதது" என்பதற்கேற்றாற் போல் பிரதேசப் பற்றுடைய பற்றாளர்களின் சிறப்பான தலைமைத்துவத்திலும் திட்மிடலிலும் ஒழுங்கு படுத்தலிலும் செயற்பட்டுவரும் இவ் ஒன்றியத்தின் முயற்சி மேலும் விரிவுபட அதன் மூலம் எமது பிரதேச மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மேம்பாடடைய அகவை பத்தை நிறைவு செய்யும் ஒன்றியத்தின் பணி பிரகாசமடைய தென்மராட்சியின் கல்விச் சமூகம் சார்பாக மனம் நிறைந்த வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. சு. கிருஷ்ணகுமார்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
தென்மராட்சி.

# தென்மராட்சி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வாழ்த்துச்செய்தி



சைவமும் தமிழும் மேன்மையாக விழங்கும் தென்மராட்சிப்பிரதேச மக்களின் அறிவாலயமாகவும் , கலங்கரை விளக்காகவும், விளங்கும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பெயரைத் தாங்கிய நோர்வே சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழையமாணவர் ஒன்றியத்தின் பரந்துபட்ட சிறப்பான செயற்பாட்டின் பத்து ஆண்டு நிறைவையொட்டி வெளியீடு செய்யப்படும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சிகொள்கிறேன்.

"பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலின் பெரிது."

இவருக்கு இது செய்தால் இன்னது பயக்கும் என்று ஆராயாது செய்த உதவியின் பயனை நோக்கும்போது அதனால் வரும் நன்மைகளோ பெரும் கடலை விட விஞ்சியதாகும் என்பது உலகப்பொதுமறை தந்த வள்ளுவன் வாய்மொழியாகும்.

இந்தவகையில் நோர்வே நாட்டில் செயற்பட்டுவரும் சாவகச்சேரி இந்துக்கல்லூர்ரி பழையமாணவர் ஒன்றியமானது தனது கல்லூரித்தாயை என்றும் மனதிருத்தி வளப்படுத்தி பூத்துக்குலுங்கச் செய்யும் அதேவேளை, சூழவுள்ள பாடசாலைகளையும் வளப்படுத்த வேண்டுமென உதவ நினைப்பதுதான் பெரிய பரோபகாரமாகும். இப்பழையமாணவர் ஒன்றியமானது, தென்மராட்சியிலுள்ள கணிசமான பாடசாலைகளுக்கு தனது கொடைக் கையை நீட்டியது மட்டுமன்றி, தன்னை நாடி யாரும் வரவில்லையே என்று ஏங்குகின்றதென்றால் அதுதான் சமுதாயரீதியான தூரநோக்கு எனலாம். இந்த மனப்பாங்கு இலகுவில் யாருக்கும் வந்துவிடுவதில்லை.

2004ம் ஆண்டு சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு உதவ ஆரம்பித்த இந்த செயற்பாடு, 2005ம் ஆண்டு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திற்கு வியாபித்தது. அப்போது அவ்வித்தியாலயத்தில் நான் அதிபராக கடமையாற்றும் பாக்கியம் பெற்றிருந்தேன். இச்சங்கத்தினர் என்னை அணுகியபோது வித்தியாலயத்திற்கு முழுமையான மின்சாரவசதியை ஏற்படுத்தி தரும்படி கோரியிருந்தேன். அவர்களும் இதை முழுமனதோடு ஏற்று செய்து தந்தார்கள். இதன்மூலம் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் நன்மையே பெற்றார்கள். கணணி உட்பட நவீன கற்றல், கற்பித்தல் சாதனங்களை இயக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. இச்செயற்பாட்டை அப்பொழுது மட்டுமல்ல, இன்றும் நன்றியுடன் வித்தியாலய சமூகம் நினைவுகூர்ந்து நன்றியாக உள்ளது.

தொடர்ச்சியாக நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் , சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை, மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்துக்கல்லூரி சிற்றுண்டிச்சாலை அமைப்பதற்கான உதவி, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்தியகல்லூரி, கச்சாய் அ.த.க. பாடசாலை, மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், மந்துவில் றோ.க.த.க. பாடசாலை யென உதவிகளைப் பெற்று வளர்ச்சி கண்டுள்ளது.

இப்பணி மேலும் பல பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கவேண்டுமென எனது விருப்பத்தை தெரிவித்து, பத்து ஆண்டுகளாக நல்ல பல காரியங்களைச் செய்துவரும் இவ் ஒன்றியத்தின் தலைவர் , மற்றும் அங்கத்தவர்கள் யாவரையும் மனதாரப் பாராட்டி, எல்லாம் வல்ல ஆண்டவன் அருளாசி எல்லோருக்கும் கிடைக்க பிரார்த்தித்து ஆசிகூறி வாழ்த்துகின்றேன்.

நன்றி

கு.சிவானந்தம்
கோட்டக்கல்விப்பணிப்பாளர்
தென்மராட்சி
சாவகச்சேரி




## தூரத்து மேகமும் தூவும்.........



நெஞ்சிலே ஏக்கங்களையும் கனவுகளையும் சுமந்துகொண்டு தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்த எமது ஈழத்தமிழ்ச்சமூகம் வந்துவீழ்ந்த வாழிடங்களில் வாழாதிருந்து விடவில்லை. எமக்கே உரித்தான பண்பாட்டு விழுமியங்களை பேணிக்கொண்டு, அதேநேரம் சூழலுக்கு இணையாக வாழவும் கற்றுக்கொண்டோம். மேலும் அன்னிய சமூகங்களின் அவலமான பக்கங்களுக்குள் கரைந்துவிடாமல் எம் தனித்துவத்தையும் தக்கவைத்துக்கொண்டோம். தாயையும் தாயகத்யையும் நேசிக்க மீசைமுளைக்க தேவையில்லை என்று எமது தாயக கவிஞன் பாடினான். அந்த வகையில் உலகின் எந்த மூலைக்கு சென்றாலும் தாய் நிலத்துடனான பிணைப்பு தொப்புள்கொடி உறவாக தொடரவே செய்யும். தமிழர்களின் அழிக்கமுடியாத மூலதனமும் பலமும் கல்வியே. அதனால்தான் வெட்டவெட்ட தழைத்து விழுதெறிந்துகொண்டிருக்கின்றோம். இளம்பராயத்தில் கல்வியைத் தந்த கல்விக்கூடங்கள் பசுமரத்து ஆணியாய் எமது ஆழநெஞ்சில் வேரோடிக்கிடப்பவை. அந்த தாய்மடியை மறவாது இன்று உலகெங்கும் இருந்து பாடசாலை பழையமாணவர் சங்கங்கள் தம்மை உருவாக்கிய பாடசாலைகளுக்கு அளப்பரிய பங்களிப்பை நல்கி வருகின்றனர். தமக்குரிய கல்விக்காலத்தைக் கடந்தும் அடுத்த தலைமுறையின் கல்விக்காக இன்று பலர் சிந்திக்கின்றார்கள். செயற்படுகின்றார்கள்.

அந்தவகையில் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் நோர்வே பழையமாணவர் ஒன்றியத்தை ஓர் பலமான விழுதாகத்தான் பார்க்கின்றேன். இக்கல்லூரி நூறு வருடங்களுக்கு மேற்பட்ட கல்விப்பாரம்பரியத்தை கொண்ட சிறப்புடையது. அதன் பழைய மாணவர்கள் நோர்வேயில் சொற்ப எண்ணிக்கையில் வாழ்ந்தாலும் , அவர்களின் பணியின் பலனும் பலமும் பெரிது. இதை கடந்த பத்து ஆண்டுகளாகவே அவதானித்திருக்கின்றேன். இவர்களது தார்மீகப்பணி தம்மை உருவாக்கிய கல்லூரியோடு மட்டும் நிறைவடைந்து விடவில்லை. இதில் குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் தென்மராட்சி வலயத்தில் உள்ள ஏனைய சிறுசிறு பாடசாலைகளுக்கும் கட்டிடங்களாக, கல்வி உபகரணங்களாக தம்மால் முடிந்த பங்களிப்பை நல்கியிருக்கின்றார்கள். கிட்டத்தட்ட ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பாடசாலையை தெரிவு செய்திருக்கின்றார்கள். இந்த கல்விக்கொடை காலத்தால் நிலைக்கும். போற்றப்படும்.

இவைமட்டுமன்றி தாய்தந்தையரை இழந்த கல்வித்தாகம் கொண்ட மாணவருக்கும் , வறுமைக்கோட்டின் கீழுள்ள மாணவருக்கும் , கல்விப்பின்புலத்திற்கான ஏற்பாடுகளை தாங்கள் செய்வது என்னை சிலிர்க்கவைக்கின்றது. இவ்வாறான உதவும் கரங்களே மீண்டும் எம் சமூகம் மிடுக்கோடு நிமிர வழிகோலும். எட்ட நின்றாலும் நீளும் உம் கரங்கள் ஆதரவாய் வருடுகிறது. தூரத்து மேகமானாலும் வேருக்கு பொழியும் என்பதை நிரூபித்திருக்கின்றீர்கள்.
தங்கள் பணி தொடர நிறைந்த நெஞ்சோடு வாழ்த்துகின்றேன்.

தோழமையுடன்
சிவதாஸ் சிவபாலசிங்கம்
கவிஞர் / தமிழாசிரியர் 20.09.2014

# J/CHAVAKACHCHERI HINDU COLLEGE

(National School)

## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(தேசிய பாடசாலை)

CHAVAKACHCHERI
சாவகச்சேரி
எனது இல: J/CHC/
திகதி: 10.02.2014

☎:021-2270351
☎:021-2270350
**E-mail:chava hindu @gmail.com**


---

### கல்லூரி முதல்வரின் வாழ்த்துச் செய்தி

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் ஒன்றியம், நோர்வே கிளையினர் நடாத்துகின்ற ஒன்றியத்தின் பத்தாவது ஆண்டு இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். எமது இந்து அன்னையின் வாரிசுகள் உலகின் பல நாடுகளில் வாழுகின்ற அதேவேளையில் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்படுவது எமக்கு பெருமை சேர்க்கின்றது. வட மாகாணத்தின் முன்னணிக் கல்லூரிகளில் ஒன்றான எமது கல்லூரி இரண்டாயிரமாண்டில் நடைபெற்ற யுத்த அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து தனது சொத்துக்களை இழந்து வளப்பற்றாக்குறையுடன் தன்னாலான பணியைச் செய்து வருவதை அறிவீர்கள்.

மாணவர் தொகைக்கேற்ப வகுப்பறை வசதியின்மை, கற்றலுக்கு ஏற்ற வசதிகளுடன் கூடிய வகுப்புக்களின்மை, நூலகப் புத்தகங்களின் பற்றாக்குறை, விஞ்ஞான ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள் உபகரணங்கள் பற்றாக்குறை, விஞ்ஞான ஆய்வுகூட ஆளணிப்பற்றாக்குறை, மாணவர் தொகைக்கேற்ற கணினிகள் பற்றாக்குறை என வளக்குறைவுடன் செயற்பட்டு வருகின்றது.

எமது தேவைகளில் பலவற்றை புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள எமது உறவுகள் குறிப்பாக பழைய மணாவர் ஒன்றியங்கள் செய்து வருவது மனமகிழ்வைத் தருகின்றது. 2004 ஆம் ஆண்டில் நோர்வே பழைய மாணவர் ஒன்றியத்துடன் சுவர்ணி நகைமாடத்தினரால் வழங்கப்பட்ட நிழற்பட பிரதியாக்க இயந்திரம் இன்னும் கல்லூரியில் செயற்றிறனுடன் இயங்கி வருகின்றது. அலுவலகப்பணிக்கும், மாணவரக்ளின் கற்றல் கையேடுகளை பிரதி எடுப்பதற்கும், பெறுபேறுகளை பிரதி எடுப்பதற்கும் உதவி வருகின்றது.

நோர்வே பழைய மாணவர் ஒன்றியத்தினால் சிற்றுண்டிச்சாலை அமைப்பதற்கு ஆரம்ப கட்டமாக வழங்கப்பட் 82500 ரூபா பணம் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய பணம் பெறுவதிலுள்ள சிரமம் காரணமாக விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளர்களை நியமனம் செய்வதென முடிவெடுக்கப்பட்டது. 01.11.2013 முதல் கல்லூரியில் இருந்து க.பொ.த (உ/த) வகுப்பில் சித்தி பெற்ற இரு மாணவர்கள் அவர்கள் உயர்கல்வி வசதி பெறும் வரை தற்காலிக ஆய்வுகூட உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் மூலம்

விஞ்ஞான பாட செய்முறை வகுப்புக்கள் இலகுபடுத்தப்பட்டுள்ளது. இச்செயற்பாட்டை தொடர்வதற்கு இதற்கு நிதி வழங்கும் நிதியத்தின் தொகை உயர்த்தப்பட வேண்டியுள்ளது.

எமது கல்லூரிக்கு உதவியதுடன் தென்மராட்சியில் உள்ள ஏனைய பாடசாலைகளுக்கும் இச்சங்கம் ஆண்டு தோறும் உதவி வருகின்றது. இச்செயற்பாடு பாராட்டப்பட வேண்டியதாகும்.

எமது கல்லூரியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நீங்கள் என்றும் உதவுவீர்கள் என்ற நம்பிக்கையுடன் கல்லூரிச் சமூகத்தின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ.கயிலாயபிள்ளை

அதிபர் A. Kailayapillai
Principal
J/Chavakachcheri Hindu College
National School
Chavakachcheri





யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்.
J/ Nunavil East Amirthambikai vidyalayam.
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.
Nunavil East, Chavakachcheri.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழையமாணவர் ஒன்றியம் நோர்வே கிளையினர் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் தாய் நாட்டின் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தங்களாலான பங்களிப்பை சிறப்பான முறையில் நல்கிவருவது பலராலும் பாராட்டத்தக்கது. இவர்களின் ஒரு பரந்துபட்ட சிந்தனையின் ஒரு வெளிப்பாடே அயற்பாடசாலையான எமதுபாடசாலைக்குச் செய்த உதவியாகும். இவ் உதவியை என்றும் எம் வித்தியாலய சமூகம் மறக்காது. இவ்வாறான பரந்துபட்ட சேவையைச் செய்யும் இவ் ஒன்றியத்தை பாராட்டும் அதே வேளை மேலும் எமது அயற்பாடசாலைகளுக்கும் அவர்களின் சேவை கிடைக்கவேண்டும். எனக்கேட்டு அவர்களின் பணி சிறக்க மனதார வாழத்துகின்றோம்.

நன்றி.

பாடசாலைச் சமூகம்.

# சேவைசிறக்க வாழ்த்துகின்றோம்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நோர்வே பழைய மாணவர் சங்கத்தின் பத்தாவது ஆண்டின் நிறைவையொட்டி வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். இச்சங்கமானது பரந்தநோக்குடன் தென்மராட்சியின் பல்வேறு பாடசாலைகளின் தேவைகளை அறிந்து; மாணவர்களின் கல்விவளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருவது பாராட்டத்தக்கது. அவர்களின் சேவையால் பாடசாலைகள் ஓரளவேனும் அவசியதேவைகளை பூர்த்தி செய்யக்கூடியவாறு உள்ளது. ஆண்டுதோறும் அவர்களின் வளர்ச்சியும் நிதிஒதுக்கீடும் தென்மராட்சிப்பாடசாலைளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது அந்தவகையில் எமது பாடசாலைக்கும் 2008ஆம் ஆண்டு மாணவர் கல்வியை வளப்படுத்தும் நோக்குடன் நிழற்பட இயந்திரம்,

மின்பொருள்,மின்இணைப்புவேலைகளுக்கென 241500.00 ரூபாவினை வழங்கியதை நினைவுகூர்ந்து பெருமகிழ்வடைகின்றோம். மேலும்தங்கள் பணிசிறக்க என்றென்றும் எங்களனைவரதும் ஒத்துழைப்பும் ஒத்தாசைகளும்கிடைக்குமெனக்கூறி மனதார வாழ்த்துகின்றேன்.

அதிபர்
திருமதி.சி.கந்தசாமி.
யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.

## மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்

### வாழ்த்துச்செய்தி

யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழையமாணவர்சங்க நோர்வேக்கிளையினர் வெளியிடும் சஞ்சிகைக்கு, வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

புலம்பெயர்ந்து போயினும், பிறந்த நிலம் மறந்துபோகாது, தாயகத்தில் தாம் பயின்ற கல்விச்சாலைக்கு மட்டுமன்றிச், சூழவுள்ள சின்னஞ்சிறு கல்விக்கூடங்களையும் கருத்திலெடுத்து பேருதவிகள் ஆற்றும் பெருமனப்பாங்கு போற்றி வியத்தற்குரியது. அந்தவகையில் தங்கள் பழையமாணவர்சங்க கிளையினர் மதிற்சுவரமைத்து, எமது பாடசாலைக்கு காலத்தினாற் செய்த உதவியை பாடசாலைச்சமூகம் என்றும் மனத்திருத்தி நன்றிபாராட்டும். அந்த நன்றிக்கும் பெருமைக்கும் உரியமேற்படி சங்கத்தின் சஞ்சிகை சிறப்புறமலரவேண்டுமென பாடசாலைச்சமூகம் சார்பில் மனம்நிறைந்து வாழ்த்துவதோடு, சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம் ஆழவேருன்றி அகலக்கிளை பரப்பி மென்மேலும் பணிகள் பல புரிந்து புகழ்பெற இறையாசியை இறைஞ்சுகின்றோம்.

for

அதிபர்
யா/மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்
மீசாலை






# J/MEESALAI VIGNESWARA MAHA VIDYALAYAM
## யா/மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்

**Mr. T. Ampalavanar,** B.A., Dip. in. Ed., S. L. P. S. - 2I
*Principal*

MEESALAI
மீசாலை.


12/02/2014.

திரு. நா. ஞானகுமார்.
பிரதி அதிபர்.
யா/மீசாலை விக்கினேஸ்வர ம.வி,
மீசாலை.

யா/இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஒன்றியம் - நோர்வே.
நோர்வே.

நோர்வே சங்கத்தின் தசாப்த கால சேவைப்பூர்த்தியை முன்னிட்டு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

பாடசாலைகள் தங்களுக்குத் தேவையான வளங்களை தாமே பெருக்கி அவற்றின் வாயிலாக பிள்ளைகளின் கல்வி விருத்தியை உருவாக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படும் ஒரு காலகட்டத்தில் தனித்து பெற்றோர்களின் பங்களிப்புடன் மட்டும் மேற்படி இலக்கை எட்டிவிட முடியாது.

அந்தவகையில் எமது பாடசாலைக்குக் கற்றல் அபிவிருத்திக்கும், முகாமைத்துவ செயற்பாடுகளை வினைத்திறன் ஆக்கவும் பயன்பாடான போட்டோக்கொப்பி இயந்திரத்தையும் அத்துடன் பிள்ளைகளின் தோற்றப் பாங்கினை விருத்தி செய்வதற்காக பாதணிகளையும் இலவசப் பெறுமதி ரூபா 185000/= க்கு 2010 ஆம் ஆண்டில் தங்கள் சங்கம் எமது பாடசாலைக்கு வழங்கியிருந்தது.

மேற்படி தங்களின் உதவியை எமது பாடசாலை சமூகம் என்றும் நன்றியுடன் நினைவு கூருகின்றது. மேலும் தங்களது சங்கம் வளர்ச்சியடைந்து தங்களின் சேவை இலக்குகள் நிறைவேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து பாடசாலை சமூகம் சார்பாகவும் என் சார்பாகவும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதிபர்
யா/மீசாலை விக்கினேஸ்வர ம. வி
மீசாலை

# யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி
# J/KODIKAMAM THIRUNAVUKKARASU CENTRAL COLLEGE

T.P.No.0212050382 web : www.thirunavu.sch.lk E.Mail : kodi.thiru@gmail.com


13/02/2014.

## ஆசிச்செய்தி

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஒன்றிய நோர்வே கிளையினால் வெளியிடப்படும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் முதல்வர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். மனித உள்ளங்கள் பலவிதப்பட்டவை. தானும் தன்வீட்டாரும் என்ற நிலையில் வாழும் சமூக அமைப்பிலே தான் சிறப்புற்று வாழ்வதைப் போல் தன்வீட்டாரையும் அயல்வீட்டாரையும் வாழவைக்க வேண்டும் என்னும் மனோ பக்குவத்துடன் செயற்பட்டுக்கொண்டுவரும் இவ்வமைப்பு தமிழ் மக்களின் அதுவும் தென்மராட்சியில் இந்துவின் மைந்தராக இருந்து உதவி வழங்கி வருவதையிட்டு பெருமை கொள்கின்றோம். மேற்படி ஒன்றியத்தால் சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு மட்டுமல்லாது அதன் அயல் பிரதேச பாடசாலைகளின் வளர்ச்சிக்காகவும் பல்வேறு செயல்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. 2011 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்ட அமுலாக்கத்திலே எமது பாடசாலைக்கு 500000/= ரூபாவினை ஒதுக்கீடு செய்து 375000/= ரூபா பெறுமதியான டுப்ளோ போட்டோப்பிரதி இயந்திரம் வழங்கப்பட்டதுடன் மிகுதி 125000/= ரூபா பணத்தில் 160 அடி நீள மதிலும் அமைத்துத் தரப்பட்டது. டுப்ளோ போட்டோப்பிரதி இயந்திரத்தினைப் பெற்றுக்கொண்டதன் மூலம் பல பாடசாலைகளுக்கு வினாத்தாள்களை அச்சிட்டு வழங்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு கல்வி விருத்தி நோக்கிய செயற்றிட்டத்துடன் சமூகவிருத்தி நோக்கிய செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவது கண்டு உவகையடைகின்றோம். இவ்வாறான பணிகளை முன்னெடுத்து வரும் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர்சங்க நோர்வேக்கிளை உறுப்பினர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பில் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் தென்மராட்சிப் பிரதேசத்திற்கு சேவையாற்ற இறையாசி வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

திரு.வ.நடராசா
அதிபர்,
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி.

V. NADARAJAH
PRINCIPAL
J/THIRUNAVUKKARASU CENTRAL COLLEGE
KODIKAMAM







**மணி ஓசை** கலை, இலக்கிய,சமய சஞ்சிகையாக
மாதந்தோறும் வெளிவருகின்றது. திறமைமிக்க
ஆசிரியர்கள், வடிவமைப்பாளர்களால் எமது
நாட்டிலிருந்து பிரசுரிக்கப்படும் மணிஓசையின்
வளர்ச்சிக்கு வாசகர்களாகிய உங்கள் ஆதரவுகளையும்
ஆக்கங்களையும் வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையில்
மணி ஓசை உங்கள் வாசலை நோக்கி வருகின்றது
என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்..

தொடர்புகளுக்கு: ஒஸ்லோ : 0047 48262988
மீசாலை : 0094 778051173

E-Mail: manioosai@gmail.com



யா/ கச்சாய் அ. த. க. பாடசாலை, கொடிகாமம்
**J/KACHCHAI G.T.M. SCHOOL**
**KODIKAMAM**

kachchaigtms@yahoo.com TP. No - 021 373 4655 , 021 2050 727

12.02.2014

தலைவர், செயலாளர்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
நோர்வே.

**பள்ளிச் சிறார்க்கு பரந்து நும்பணி வாழ்க.**

தென்மராட்சியில் தலைமைத்துவப் பாடசாலையான யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி பெற்றெடுத்த மாணவர்கள் உள்நாட்டில் மட்டுமல்ல புலம்பெயர் நாடுகளிலும் தங்கள் பணிகளை தங்கள் உறவுகளின் கல்விக்காகவும் சேவைக்காகவும் அற்பணித்து வருவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தாமுண்டு தம்பணியுண்டு தமது உறவுண்டு எனச் சிந்திக்கின்ற சமுதாயத்தின் மத்தியில் ஊருண்டு உலகெங்கும் எமது உறவுண்டு என்று உலகெங்கும் பரந்திருக்கும் உறவுகளை ஒன்றிணைத்து தம்நலன் கருதாது சேவைகளைத் தொடர்கின்ற நோர்வே வாழ் பளையமாணவர் ஒன்றியத்தை வாயாரப் போற்றுவதற்கு வார்த்தைகள் போதாது. உங்கள் பணி தொடர்வதன் மூலம் எமது ஈழத் திருநாட்டில் கல்விப்பணி சிறக்க உங்கள் பணி தொடர 10ஆண்டு நிறைவு விழாவில் எனது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்

**வாழ்க பல்வாண்டு வளர்க உங்கள்பணி**

**நன்றி**

திரு க.உதயகுமாரன்
அதிபர்

# யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்
## J/MANTHUVIL SRI BHARATHY VIDDIYALAYAM

மந்துவில்,
கொடிகாமம்.

Manthuvil,
Kodikamam.


10-02-2014

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி,

பழைய மாணவர் ஒன்றியம்,

நோர்வே.

## <u>வாழ்த்துச் செய்தி</u>

"அறிவு அற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்

உள்ளழிக்கல் ஆகா அரண்" என்றும்

"கேடில் விழுச்செல்வம் கல்வியொருவருக்கு

மாடல்ல மற்றுப்பிற"

என்றும் கூறும் வள்ளுவர் பொய்யா மொழிக்கிணங்க அழியாச்செல்வமாகிய கல்வியை வளர்க்க நவீன காலவோட்டத்தில் என்றும் எல்லோர்க்கும் பயன்தரவல்ல நிழற்பிரதி இயந்திரத்தை(PHOTO COPY MACHINE) எமது வித்தியாலயத்துக்கு மனமுவர்ந்து வழங்கிய செயலானது எம்மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு மிகமிக உறுதுணையாக அமைகின்றது. இது "காலத்தாற் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது" என்பதற்கிணங்க பெரிதாக மதிக்கின்றோம். எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் எனும் முதுவாக்கிற்கிணங்க எண்ணையும் எழுத்தையும் கொண்ட தரவுகள்,தகவல்களை பிரதி செய்ய எமக்கிருந்த சிரமத்தினை நீக்க பேருதவியாக அமைந்துள்ளது.

"உதவி வரைந்தன்று உதவி உதவி

செயற்பட்டார் சால்பின் வரைந்து"

என்பதற்கமைய நாம் என்றென்றும் நினைவு கூருவோம் என்பதனையும் உங்களது இத்தகு கொடைகள் மேன்மேலும் வளர வேண்டும்.தனது பத்து வருட சேவையினை பூர்த்தி செய்யும் ஒன்றியமானது உயர்ந்து சிறந்து அரும் பெரும் செயல்களை ஆற்றவேண்டும் இதற்கெல்லாம் எல்லாம் வல்ல இறைவனருள் ஒன்றியம் வாழ் அங்கத்தவர்களுக்கு கிட்ட இறைவன் பாதம் பணிந்து தங்களை வாழ்த்தி போற்றுகின்றோம்.

"வளர்க நும்பணி"

A. Raj

Mrs. A. Rajaratnam
Principal
J/Manthuvil Sri Bharathy Vidyalayam
kodikamam.

பாடசாலைச் சமூகம்,

யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்.







பூப்புனிதநீராட்டுவிழா பிறந்ததினம் போன்ற
அனைத்து நிகழ்ச்சிகளையும் படம்பிடித்துக்கொள்ள
நாடவேண்டிய இடம்



கோடிஸ் போட்டோ
தொலைபேசி இல-93048579

# நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்



சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கத்தின் பழையமாணவர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு ஒரு தசாப்த காலத்தை எட்டியிருப்பதும், அதையொட்டியதொரு விழாவை எமது நோர்வே சங்கத்தினர் ஏற்பாடு செய்திருப்பதும் மிகமிக தித்திப்பான செய்திகளாகும்.

எமது கல்லூரி அன்னையின் பிள்ளைகள் உலகின் எப்பாகத்தில் வாழ்ந்தாலும் , எமது அன்னை எமது உயிருக்கும் மேலானவள் என எடுத்தியம்புவதுபோல, நோர்வே பழையமாணவர் சங்கத்தின் செயற்பாடுகளும் அமைந்துள்ளது. எமது பாடசாலையானது நகர்புற பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது, மிகவும் குறைந்த பௌதீக வளங்களுடன் இயங்கி வருவதனால் , எமது சங்கம் அவ்வப்போது பாரிய நிதியுதவிகளை பாடசாலைக்கு வழங்கவேண்டியதொரு தேவை தொடர்ந்து இருந்து வருவதனை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். சமீபத்தில்கூட, பாடசாலை பிரதான மண்டபத்திற்கு (அருணாசலம் மண்டபம்) மிகமிக அவசியமாக தேவையாகவிருந்த 26 கூரை மின்விசிறிகளை ஏறத்தாள இரண்டு லட்சம் ரூபா செலவில் எமது சங்கம் பொருத்தி வழங்கியுள்ளது.

இப்பேற்பட்ட தேவைகளுக்கு நாம் எமது அயல் நாடுகளிலுள்ள பழைய மாணவர் சங்கங்களின் உதவியைத்தான் எதிர்பார்க்கின்றோம். தாங்கள் கடந்த காலங்களில் எமக்கு வழங்கிய பயன்தரு உதவிகளை நன்றியுடன் நினைவு கூர்ந்து செயலாளர் என்ற ரீதியில் மேற்படி கோரிக்கையையும் தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டுவருவதற்கு இது பொருத்தமானதொரு வேளை என கருதுகின்றேன்.

தங்கள் தசாப்த விழா சிறப்பாக நடைபெறவும் , எமது நோர்வே பழைய மாணவர் சங்கம் மேலும் பல தசாப்த விழாக்களை கண்டு வெற்றி நடைபோட எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன், சங்க அங்கத்தவர்களுக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் இறைவன் தீர்க்க நல் ஆயுளையும், சிறப்பான எதிர்காலத்தையும், மகிழ்ச்சியையும், வனப்பையும் வாழ்வில் நல்கவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

யோகேஸ்வரன் ஜெயக்குமார்
செயலாளர்- பழையமாணவர்சங்கம்
சாவகச்சேரி இந்துக்கல்லூரி
(தேசிய பாடசாலை)
சாவகச்சேரி
10.09.2014

## நடப்பாண்டு நிர்வாகசபை உறுப்பினர்கள்:–



தலைவர்
முருகேசு சிவபாலன்




செயலாளர்.
விவேகானந்தன் விவேதரன்



பொருளாளர்.
யோகமூர்த்தி சிவயோகம்



உப தலைவர்
மகேஷவரன் ரகுபரன்



உப செயலாளர்.
வினாயகம் சங்கர்



உப பொருளாளர்
ஆறுமுகம் ஜெயகாந்தன்



நிர்வாக உறுப்பினர்
பத்மநாதன் சுதர்சன்

## கணக்குபரிசோதகர்கள்:



கந்தையா கௌரீஸ்வரன்



சிறீ இளங்கோ நாகராசா

## உதவிக்குழு உறுப்பினர்கள்:–

முத்துலிங்கம்
முரளீதரன்



காசிநாதன்
நிர்மலநாதன்



சிவகுமார்
விநாயகமூர்த்தி



கருணாகரன்
வினாசித்தம்பி



அஜெய்
விமலநாதன்

கேதீஸ்வரி
சந்திரகுமார்

## கடந்தகாலங்களில் நிர்வாகத்தில் இணைந்து பணியாற்றியோர்கள்.



தர்மலிங்கம்
ரவிவர்ணன்



செல்வேந்திரன்
செல்லத்துரை



நவரட்ணம்
பிரபாகரன்



ஆனந்தகுமார்
சிவலிங்கம்



பத்மராணி
பத்மநாதன்

தபோதினி சிறீ



சிவலோகம்
செல்வேந்திரன்




குகநாதன்
நாகரட்ணம்



சற்குணமாறன்
வேலுப்பிள்ளை



பஞ்சாட்சரம்
இரத்தினசபாபதி



மோகன்
பரமநாதன்

| 2005 | NOK |
| --- | --- |
| Ananthakumar Sivalingam | 1000,- |
| Sivabalan Murugesu | 1000,- |
| Sivayogam Yogamoorthy | 2000,- |
| Nirmalanathan Kasinathan | 1000,- |
| Thamayanthi Nahuleswarathas | 1000,- |
| Yalalagan Nadesapillai | 1000,- |
| Vanitha Thayaparan | 500,- |
| Kuganathan Naganathan | 1000,- |
| Ketheeswary Santhirakumar | 1000,- |
| Selvendran Sellathurai | 1000,- |
| Gowreeswaran Kandiah | 500,- |
| Prabaharan Navaratnam | 500,- |
| Rupadushitha Mahesparan | 500,- |
| Thabothini Sritharan | 1000,- |
| Srielango Nagarajah | 500,- |
| Kunamani Paramu | 300,- |
| Sivarajah Rasaiah | 1000,- |
| Satkunamaran Veluppillai | 1000,- |
| Pathmarani Pathmanathan | 300,- |
| Shankarr Vinajagam | 500,- |
| Yogeswary Arunakirinathan | 500,- |
| Logathas Pathmanathan | 1000,- |
| Mohan Paramanathan | 1000,- |
| Vasanthan Arumugam | 500,- |
| Nirmalan Sittambalam | 300,- |
| Ajay Wimalanathan | 1000,- |
| Srikanth Nalathamby | 500,- |
| Varathalingam Selliah | 1000,- |
| Vivetharan Vivekananthan | 500,- |

| | | |
|---|---|---|
| 29.10.2005 | Mrs. Ponnampalam (London) | 3000,- |
| 29.10.2005 | S. Thileepan | 1000,- |
| 01.04.2005 | Sutharsan Pathmanathan | 1000,- |
| 01.04.2006 | Sutharsan Pathmanathan | 500,- |
| 06.11.2010 | Uthayakumar Sivalingam | 1000,- |
| 06.11.2010 | Kalaimagal Srinagulakumar (Vasanthy) | 500,- |
| 07.05.2011 | Majoran Annamalai (London) | 5000,- |
| 07.05.2011 | Thamayanthi Nahuleswarathas | 2000,- |
| 17.01.2014 | Sivathas Sivabalasingam | 500,- |

அனுசரணை வழங்கியோர்கள்:-
2004:
ரவிவர்ணன் தர்மலிங்கம்(சுவர்ணி நகைமாடம்) – போட்டோ பிரதி இயந்திரம்
- 188.875 இல.ரூபா

**கலைமாலை 29.10.2005**
சாரங்கா நகைமாளிகை - 1500 குரோணர்
யாழ்தேவி உணவகம் - 750 குரோணர்
லக்கி செவின் - 1500 குரோணர்
Flamenco Pizza - 1000 குரோணர்
ஒளிப்பதிவு - தேவன்
நிழற்படம் - விவேதரன் விவேகானந்தன்
ஒலி அமைப்பு - அனுரா

**கலைமாலை 07.05.2011:**
வர்ணமகால் நகைமாளிகை(ரவிவர்ணன் தர்மலிங்கம்) – 5500 குரோணர்
சுதர்சன் பத்மநாதன் - 1500 குரோணர்
சாரங்கா ஜவலறி - 1000 குரோணர்
உதயகுமார் சிவலிங்கம் ரூ வசந்தகுமார் சிவலிங்கம் - 3000 குரோணர்
ஒலி அமைப்பு - சத்யா
நிழற்படம் - ஜோசப்
ஒளிப்பதிவு - தவம்

**கலைமாலை 24.10.2014**
சுதர்சன் பத்மநாதன்(ஏஞ்சல் பரடைஸ்) – மண்டபம்
ஒலி அமைப்பு - சத்யா
ஒளிப்பதிவு - விக்னகுமார் மகேசன்
நிழற்படம் - கோடீஸ்வரன் சுப்பையா
Fet pizza – Fetsund கணேஸ் கேதீஸ்

சாவ /இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்-சுவிஸ்.
வாழ்த்துச் செய்தி.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஒரு நீண்ட கல்விப் பாரம்பரியம் மிக்க கல்வி வளாகம். தென்மராட்சிப் பகுதியின் கல்விச் செயற்பாட்டில் மிக முக்கிய பங்கை நீண்ட காலமாக ஆற்றிவரும் எமது பாடசாலை இந்த வருடம் நூற்றிப்பத்தாவது ஸ்தாபகர் நாளை கொண்டாடி நிற்கின்றது.

1904 ம் ஆண்டில் திரு.தாமோதரம்பிள்ளையவர்களால ஆரம்பிக்கப்பட்ட எமது கல்வி வளாகம் இன்றைய நிலையில் உயரிய பங்காற்றி நிர்வாகத்திறன்மிக்க, ஆளுமைமிக்க கல்விப் பெருந்தகைகளை உருவாக்கி கல்கிச் சமூகத்திற்கு உன்னதம் சேர்த்திருக்கின்றது. 1904ம் ஆண்டு என்பது முற்றிலும் வேறான கல்விச்சூழலை கொண்டிருந்த காலம் எனலாம். கிறித்துவ மிசனரிமார்களின் ஆளுகையின் கீழேயே யாழ் கல்விச் சமூகம் அடிபணிந்திருந்த வேளையில் நல்ல கல்வி பெறுவதற்காக மத மாற்றமும், அதனை ஒட்டிய சீரழிவுகளும் இடம் பெற்றிருந்த வேளையில் ஆரம்ப இந்துப்பாடசாலை எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட எமது கல்லூரி இன்று பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கின்றது. தென்மராட்சிப் பகுதியின் ஒரே தேசிய பாடசாலை எனும் தகைமையோடு 1AB என்ற தர நிர்ணயத்தோடு உயர்ந்து நிற்கும் எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு பங்காற்றிய அனைவருக்கும் அடிபணிந்த வணக்கங்கள்

எமது கல்லூரியில் கல்வி கற்று புலம்பெயர் சூழலில் வாழ்ந்து வருகின்ற பழைய மாணவர்கள் தாங்கள் வாழ்ந்து வருகின்ற ஒவ்வொரு நாட்டிலும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கங்களை ஸ்தாபித்து அதனூடாக கல்லூரி அபிவிருத்திக்கான நிதிசார் பங்களிப்புகள் ஆற்றி வருவது போற்றுதலுக்குரியது

அவ்வகையில் சிலநாடுகளில் இயங்கி வருகின்ற எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்கள் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயற்பட்டு பாடசாலைக்கு தேவையான கட்டடங்கள், அதற்குண்டான புனர்நிர்மாணம், ஆய்வுகூட தேவைகள், மண்டப அபிவிருத்தி என தங்களால் இயன்றதற்கு மேலானதை இயல்பாக்கி தந்திருக்கின்றார்கள்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி நோர்வே பழைய மாணவர் சங்கம் மிக நீண்ட காலமாக இயங்கி வருவதை அறிந்து பேருவகை கொள்கின்றோம்.நோர்வே சங்க செயற்பாடுகளை அதனது இணையதளத்தினூடாக அறிந்தபோது வியப்பு மேலிட்டது.ஒவ்வொரு ஆண்டும் மிகக்குறைவான அங்கத்தவர்களை கொண்டிருந்தபோதும் சங்க செயற்பாடுகள் தொய்வின்றி நடைபெறுவதையும் மிகக் குறைந்தளவிலான அங்கத்தவர்களின் பெருநிதியின் அடிப்படையில் உதவிகள் வழங்கப்பட்டு வருவதையும் அறியக்கூடியதாக இருந்தது.

சங்கங்கள் சார்ந்த செயற்பாடுகளுக்கு புலம்பெயர்தேசங்களில் நேரமின்மை, ஆளணிப் பற்றாக்குறை என்பவை காரணமாக சொல்லப்படுவதுண்டு.நோர்வே பழைய மாணவர் சங்க செயற்பாடுகள் காத்திரமானதோடு எடுத்துக்காட்டாகவும் திகழ்கின்றது.இனிவரும் காலங்களில் நிறைந்த அங்கத்தவர்கள் - பெரிதான உதவி என்பவற்றோடு இயங்கிவருவதற்கு வாழ்த்தி நிற்கின்றோம்.

ந.முரளிதரன்
செயலாளர்.
சாவ /இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்.
சுவிட்சர்லாந்து




## வாழ்க இந்துக் கல்லூரி

**பூகோளத்தின் உச்சியாய் அமைந்த ஐரோப்பாவின் வடதுருவ நன்னாடாம் நோர்வேயில் அகவை பத்தில் அடிவைக்கும் ஆனந்த நிகழ்வை அகமகிழ வாழ்த்துகிறேன்.**

**அன்னை சாவகச்சேரி இந்து பாதம் பணிவோம்**
**அவள் கல்வியால் வாழ்கின்றோம்**
**வந்தோம் பல நாடுகள் கடந்து**
**வந்தஇடத்தில் அவள் நினைவாக**
**சங்கம் அமைத்தோம் பல நாடுகளில்**
**சகலரும் ஒன்று கூடினோம்**
**நாம் அமைத்த சங்கம் நோர்வேயில்**
**வளர்ந்து வடிவாக வேரூன்றி**

**ஆண்டுகள் பல கடந்தன**
**அறிவு தந்த கல்லூரியின் பெயரோங்க**
**சங்கம் இங்கு இணைத்தது எம்மை**
**சகலரும் கூடி அன்னைக்கு உதவிட**
**காலம் பாராது உழைத்திடுவோம் பலர்**
**கல்வி மலர உதவிடுவோம்**
**தமிழ் மாணவர்கள் உயரும் வண்ணம்**

**இன்று நாம் ஒரு சகாப்தம்**
**இனிதாக கடந்துவிட்டோம்**
**இனிவரும் காலம் இதமாக இருந்திட**
**இங்கிருந்து உதவிட முன்னிற்போம்**

**அன்னையின் பழைய செல்வங்களே!**
**அன்புடன் பணிசெய்வோம்**
**வாருங்கள்! கற்போம் கற்பிப்போம்**
**கற்பிப்பதற்கு கை கொடுப்போம்**
**வாருங்கள் மகிழ்வுடன் அன்னையை**
**வாழ்த்திட ஒன்றிணைந்து தரணியில்**
**உயர்த்திட உழைப்போம்**



*அன்புடன்*
*திருமதி தமயந்தி நகுலேஸ்வரதாஸ்*
*உளவியல் நிபுணர் (பழையமாணவர்)*
*வைத்தியசாலை* **(Ahus)**

# சாவகச்சேரி இந்துக்கல்லூரி

## பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்

புலம்பெயர் நாடுகளில் இயந்திரவாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கும் ஈழத்தமிழர்கள் மத்தியில் தாம் கல்விகற்ற பாடசாலை நினைவு பற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும் பழையமாணவர் சங்கங்கள் அமைத்து ஒன்றுகூடல்கள் நிகழ்த்தியும் ஆண்டுதோறும் விழாக்கள் நடாத்தியும் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை காட்டிவரும் நோர்வேவாழ் சாவகச்சேரி இந்துக்கல்லுர்ரி பழையமாணவர்கள் பாராட்டத்தக்கவர்கள்.

நோர்வே பழையமாணவர் சங்கம் இன்று 10வது ஆண்டுவிழா சிறப்பாக நடாத்துவதையிட்டு நாம் பெருமகிழ்வதைவதோடு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். யா/சாவகச்சேரி இந்துவின் புதல்வர்கள் இன்று நோர்வேயில் கல்வியிலும் தொழில்நுட்பத்திலும் மேலோங்கி உயர் பதவிகளை வகித்துவருவது யாவரும் அறிந்ததே. இதையிட்டு நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

இந்நிலை தொடரவேண்டுமெனில் நோர்வே வாழ் இந்துவின் பழையமாணவர்கள் அனைவரும் எவ்வித பாரபட்சமும் இல்லாமல் ஒன்றிணைந்து கல்லுர்ரி மட்டத்திலும் நிர்வாகத்திலும் ஆசிரியர் மாணவர்கள் மட்டத்திலும் உள்ள குறைகளை கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்ய உதவிகளை வழங்கவேண்டும்.

தென்மராட்சிப்பகுதியில் பெரும் குறையாக இருந்துவரும் கேட்போர்கூடம்(Auditorium) அமைக்க புலம்பெயர் நாடுகளிலுள்ள பழையமாணவர் சங்கங்கள் முன்வந்துள்ளன. இதற்கு நோர்வே வாழ் இந்துவின் புதல்வர்கள் நேசக்கரம் நீட்டுவார்கள் என நம்புகின்றோம்.

வளர்ச்சி என்பது இடையூறின்றி தொடர்ச்சியாக இடம்பெறும் செயலாகும். எனவே வளர்கின்ற நோர்வே சாவகச்சேரி இந்துக்கல்லுர்ரி பழையமாணவர் சங்கமானது மென்மேலும் வளர்ந்து சரித்திரம் படைக்கும் சாதனையாளர்களை உருவாக்கி உயர்பெருமைகள் பல சேர்த்திடவும் உலகெங்கும் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பழையமாணவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி எமது கல்லுர்ரி வளர்ச்சிக்கு முடிந்தளவு உதவிகளை வழங்கி கல்லுாரியின் பெருமையை மேலேங்கச் செய்யவும் நல்லாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

| திரு - சி. தயாளன் | திரு.சி - இராசலிங்கம் | திரு - த. பரமானந்தம் |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

# வணக்கவொளி காலாண்டிதழ்
# வாழ்த்துரை

மண்ணும் மக்களும் பயனுற நல் தொண்டாற்றி வரும் நோர்வே சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஒன்றியம் தனது பத்தாவது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடுவதை அறிந்து நாமும் வாழ்த்தி அகமகிழ்வதில் பெருமை கொள்கின்றோம்.

புலம் பெயர்ந்த போதும் மொழியுணர்வையும் இனவுணர்வையும் இழந்துவிடாமலும், நாம் எங்கிருந்து வந்தோமோ, தோற்றம் பெற்றோமோ அந்த வேர்களை மறந்துவிடாமலும், அந்த வேர்களுக்கு நீர் பாய்ச்சுகின்ற அரும் தொண்டினை நீங்கள் ஆற்றிவருகின்றீர்கள். தாயகத்தில் வாழும் எமது உறவுகளின் வளர்ச்சியினைப் புறம்தள்ளி புலம் பெயர்ந்து வாழும் நாம் மட்டும் வளர்வது ஓர் இனத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியாக இருக்கமுடியாது. அது தமிழரின் அறம் சார்ந்த பண்பாகவும் இருக்க முடியாது!. நாமும் வளரவேண்டும் நமது மக்களும் வளரவேண்டும் என்ற தொலை நோக்குப் பார்வையுடன் செயலாற்றிவருகின்றீர்கள்.

எங்கள் ஊர், எங்கள் பாடசாலை என்ற குறுகிய எண்ணத்தோடு செயற்படாமல், எலலோரும் எல்லாமும் பெறவேண்டும், பயன்கொள்ளவேண்டும் என்ற பரந்த நோக்குடைய செயற்றிட்டங்களை நீங்கள் நிறைவேற்றியிருப்பதை அறிந்து உங்களைப் பாராட்டாமல் இருக்கமுடியவில்லை. இந்தப்பணிகளில் பங்கேற்கும் ஒவ்வொருவரினதும் கரங்களை அன்போடு இறுகப்பற்றி வாழ்த்தி நிற்கின்றோம். உயர்வாக மதிக்கின்றோம்! மேலும் மேலும் உங்கள் பணிதொடரவேண்டும் என்பதும் எமது பெருவிருப்பாகும். எங்கள் தாய் தனது தவப்புதல்வர்களை எண்ணி நிச்சயமாகப் பெருமிதம் கொள்வாள்!

வி. மோகனதாசன்
இணையாசிரியர்
வணக்கவொளி
பிரான்சு




யாழ்/சாவகச்சேரி இந்துக்கல்லூரி




HINDU COLLEGE
STUDENT UNION - NORWAY










HENNIG
OLSEN



<u>கிரியா யோகா பயிற்சி வகுப்புகள்</u>

இயற்கை நமக்கு ஒரு அற்புதமான உடலைக் கொடுத்திருக்கிறது.
இந்த உடலை நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதற்கு ஏற்ப வலிமையாக,
ஆரோக்கியமாக, சுறுசுறுப்பாக வைத்திருக்க வேண்டும்
உடலை மிகவும் நன்றாகப் பேணி பாதுகாப்பது நமது கடமை.
நீரிழிவு, ஆஸ்துமா, உயர் இரத்த அழுத்தம் மற்றும் மன அழுத்தத்தைப் போக்க ஆசனங்களும்,
பிராணாயாமமும் (மூச்சுப் பயிற்சிகள்) தியானமும் எல்லோருக்கும்
மிக அவசியம்.
பிராணாயாமம் என்று சொல்லப்படும் மூச்சு கிரியாக்களுடன் சீரிய முறையில் யோகாசனங்கள் பயில
வேண்டும்.
மனதை செம்மைப்படுத்த சிறந்தமுறை தியானம் அவசியம்.
மிக எளிய முறையில் உங்கள் உடலையும், மனதையும் ஆரோக்கியத்தையும் திடப்படுத்தும் கிரியா
யோகா பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றது.

ஆசிரியர்:~ திரு. பகீரதன் அவர்கள் (தம்பா)

இடம் :~ *Ellingsrudåsen skole*
நேரம் :~ காலை 10: 30 ~ 12:45 (பிரதி ஞாயிறு)
ஒழுங்கமைப்பு :~ *universal kiriya babaji yoga sangam.*

# எமது மனமார்ந்த நன்றிகள்.

கலைமாலை நிக மண்டபம் தந்துதவிய ஏஞ்சல்பரடைஸ்
நிறுவனத்திற்கு சிகள் தந்துதவிய ஆசிரியர்கள் பங்குபற்றிய
கலைஞர்கள் ஒளி மற்றும் நிழற்படம் மூலம் அனுசரணை
வழங்கி சிற்றுண்டி தயாரித்து வழங்கியோர்கள்
சிற்றுண்டிசால தவிபுரிந்தோர்கள் திரைக்கு முன்னும்
திரைக்குப் பின்னு ந்தோர்கள் இம்மலரை திறம்பட அச்சிட்டு
தந்துதவிய திரு.த கும் மற்றும் இணையத்தளத்திற்கான
நிதிப்பங்களிப்பு செ பரன் அவர்கட்டும் இயைத்தளத்தை
இயக்கிக்கொண் விவேதரன் அவர்கட்டும் ஏனைய
வழிகளிலே ஒத்து து அன்புஉள்ளங்களுக்கும் எமது
நன்றிகள்.

கடந்த பத்து ஆ ன்றியத்தின் வளர்ச்சி நிதிக்கான
கணக்கெடுப்பு மற்றும் ஏனைய அனைத்து நிகழ்வுகளிலும் எம்முடன்
தோளோடு தோள் கொடுத்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றிகள்.

உதவிக்குழு
நிர்வாகம்

Org.nr: 988 131 822

BANK A/C:- 1503 35 89260

b: http://hinducollechava.c m

e-mail: chc.oldstudentnorway@gmail.com